**சுருக்கம்**

வேளாண்மை–உழவர் நலத்துறை – தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை – அறிவிப்புகள் 2021–22 – தரிசு நில தோட்டக்கலை சாகுபடியில் சிறந்த விவசாயிகளுக்கு ரூ.10,80,000/– செலவில் மாவட்ட அளவில் – விருதுகள் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை–உழவர் நலத் (தோ.க1–1) துறை**

**அ.ஆ (நிலை) எண் 209** **நாள் 25.11.2021**

**திருவள்ளுவர் ஆண்டு 2052**
**பிலவ வருடம், கார்த்திகை 9**

படிக்கப்பட்டது:

இயக்குநர், தோட்டக்கலை (ம) மலைப்பயிர்கள் துறை கடித எண் MIS/15462/21, நாள் 2.9.2021 மற்றும் 6.10.2021.

------

**ஆணை:**

28.8.2021 அன்று வேளாண்மை–உழவர் நலத்துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பிறவற்றுடன் பின்வரும் அறிவிப்பினை மேற்கொண்டுள்ளார்கள்:–

"தரிசு நிலங்களில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியில் சிறந்து விளங்கும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், 2021–2022ஆம் ஆண்டில் மாவட்ட அளவில் சிறந்த விவசாயிகளைத் தேர்வு செய்து சான்றிதழுடன் முதலாம் பரிசாக ரூ.15,000/–ம், இரண்டாம் பரிசாக ரூ.10,000/–ம், மூன்றாம் பரிசாக ரூ.5,000/–ம் வழங்கிட ஆண்டிற்கு ரூ.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் ".

2. மேற்கண்ட அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக இயக்குநர், தோட்டக்கலை (ம) மலைப்பயிர்கள் துறை அவர்கள் 2021–2022 ஆம் ஆண்டில் தமிழகத்தில் சென்னை நீங்கலாக பிற மாவட்டங்களில் ரூ.12 இலட்சம் மதிப்பில் தரிசு நிலங்களில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியில் சிறந்து விளங்கும் விவசாயிகளை மாவட்ட அளவில் தேர்வு செய்து, சான்றிதழுடன் முதலாம் பரிசு ரூ.15,000/– இரண்டாம் பரிசு ரூ.10,000/– மற்றும் மூன்றாம் பரிசு ரூ.5,000/–

வழங்கப்படும் என தெரிவித்துள்ளார். மேலும், விவசாயிகள் 1. உழவு செய்தல் 2. முறையான மண் வள மேம்பாடு மற்றும் நீர் சேமிப்பு தொழில்நுட்பங்களை பின்பற்றுதல் 3. தரிசு நிலங்களுக்கு ஏற்ற பயிர் மற்றும் ரகங்களை சாகுபடி செய்து அதிக மகசூல் பெறுதல் ஆகிய அம்சங்களின் அடிப்படையில் மாவட்ட அளவிலான நிபுணர் குழுவின் மூலம் தேர்வு செய்யப்படுவார்கள் என்றும், இந்த மாவட்ட அளவிலான நிபுணர் குழு மாவட்ட ஆட்சியர் தலைமையில் (1) தோட்டக்கலை இணை / துணை இயக்குநர் (2) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) மற்றும் (3) தோட்டக்கலை உதவி இயக்குநர் (நடவுப் பொருள்) ஆகியோரைக் கொண்டு அமைக்கப்படும் என்றும் தெரிவித்து இவ்விருது வழங்குவதற்கான மாவட்ட வாரியான செலவின விவரங்கள் மற்றும் இவ்விருது வழங்குவதற்கான வழிகாட்டுதல்களை இணைப்பு I மற்றும் II ல் இணைத்தனுப்பியுள்ளார்.

3. மேலும், தோட்டக்கலைத் துறையின் இணையதளமான www.tnhorticulture.tn.gov.in–ல் இதற்கான விண்ணப்பம் வெளியிடப்படும் என்றும், விவசாயிகள் மேற்காணும் இணையதளத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து அதனுடன் விண்ணப்பக் கட்டணமாக ரூ.100/– செலுத்தி விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவித்துக் கொண்டு மாண்புமிகு அமைச்சர் வேளாண்மை–உழவர் நலத் துறை அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக ரூ.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசைக் கோரியுள்ளார்.

4. தோட்டக்கலை (ம) மலைப்பயிர்கள் துறை, இயக்குநர் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினைச் செயல்படுத்தும் பொருட்டு தரிசு நில தோட்டக்கலை சாகுபடியில் சிறந்த விவசாயிகளை விண்ணப்பக் கட்டணமின்றி மாவட்ட அளவில் 36 மாவட்டங்களில் தேர்வு செய்து, சான்றிதழுடன் முதலாம் பரிசு ரூ.15,000/– இரண்டாம் பரிசு ரூ.10,000/– மற்றும் மூன்றாம் பரிசு ரூ.5,000/– வழங்க மொத்தம் ரூ.10,80,000/– (ரூபாய் பத்து இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கலாம் எனவும் இடைநிகழ் செலவுகள் / சான்றிதழ் வழங்குதல் தொடர்பான செலவினமான ரூ.1,18,800/–ஐ இயக்குநரக அல்லது சம்பந்தப்பட்ட மாவட்ட தோட்டக்கலை நிர்வாகச் செலவினங்களில் இருந்து மேற்கொள்ளலாம் எனவும் முடிவு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> 2401 – 00 பயிர் வளர்ப்பு 119 தோட்டக்கலையும் காய்கறிப் பயர் வளர்ப்பும் – மாநிலச் செலவினங்கள் – LN மானாவாரி நிலத்தில் தோட்டக்கலை பயிர்வளர்ப்பு – 359 பரிசுகளும் வெகுமதிகளும் – 01 பரிசுகளும் வெகுமதிகளும்
>
> (IFHRMS தா.தொ.கு. 2401 00 119 LN 35901)

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான நிதியொதுக்கம் ரூ.10,80,000/– 2021–2022–ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய செலவினத்தை எதிர்நோக்கி, மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினம் 2021–2022ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும். மேலும் இச்செலவினத்தை 2021–2022–ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் மற்றும் 2021–2022 துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கும் உரிய கருத்துருவினை அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொ.–1)/வேளாண்மை–உழவர் நலத்) துறைக்கு அனுப்புமாறும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. தோட்டக்கலை (ம) மலைப்பயிர்கள் துறை, இயக்குநர் அவர்கள் இவ்விருது வழங்குவது தொடர்பாக இவ்வாணையில் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் உள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண் 50410/நிதி (வே.உ.ந) / 2021, நாள்24.11.2021, மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண் 928 (தொள்ளாயிரத்து இருபத்தெட்டு) இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்.**

பெறுநர்
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, சென்னை–5.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, சென்னை–5.
முதன்மை மாநில கணக்காயர் (G&SSA), சென்னை–18.
முதன்மை மாநில கணக்காயர் (E&RSA), சென்னை–18.
மாநில கணக்காயர் (தணிக்கை) சென்னை–18.
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை–9.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–600 008.

நகல்
மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.

மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் (ம) அரசு செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், வேளாண்மை–உழவர் நலத்துறை, சென்னை–9.

நிதித்(வேளாண்–உந/வ.செ.பொ.1/வ.செ.பொ.2/வவ–I) துறை, சென்னை–9.

வேளாண்மை–உழவர் நலத் (அநமு3/வசெமதி) துறை, சென்னை–9.

உதவி நிரலர், வேளாண்மைத்துறை, சென்னை–9.

சம்பந்தப்பட்ட கோப்பு எண்.18836/தோ.க.1–1/2021.

இருப்புக் கோப்பு/உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

25.11.21

பிரிவு அலுவலர்

25.11.21 3/12

**இணைப்பு – I**

**[அரசாணை நிலை எண் 209, வேளாண்மை–உழவர் நலத் துறை (தோ.க1) துறை, நாள் 25.11.2021]**

**விருதுகள் வழங்குவது தொடர்பான வழிக்காட்டுதல்கள்:**

**I. விருதுக்கான தேர்வு அளவுகோல்கள்**

- நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி அதிக மகசூல் பெறுதல்.
- பண்ணை இயந்திர மயமாக்கல்.
- நீர் மேலாண்மையில் நவீன தொழில் நுட்பத்தை கையாளுதல்.
- நில மேலாண்மையில் ஊடுப்பயிர்/ கலப்புப்பயிர்/பல அடுக்குப்பயிர் முறைகளை பின்பற்றுதல்.
- பாரம்பரிய முறைகள்/ இயற்கை விவசாயம் மூலம் சாகுபடி செய்தல்.

**II. விண்ணப்பிக்கும் தகுதி மற்றும் முறை**

- தமிழ்நாட்டில் வசிக்கும் சொந்த நிலம் வைத்திருக்கும் அனைத்து விவசாயிகளும் இதில் பங்குபெறலாம்.
- மாவட்டத்தில் குறிப்பிட்ட பயிர்/ தொழில் நுட்பத்திற்கு மூன்று விருதுகள் (முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு) வழங்கப்படும்.
- விண்ணப்ப படிவம், துறை இணையதளம் www.tnhorticulture.tn.gov.in மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட இணையதளத்தில் கிடைக்கும்.

**III. தேர்வு செய்யும் முறை**

- மாவட்ட ஆட்சியர், தோட்டக்கலை இணை/ துணை இயக்குநர், மாவட்ட ஆட்சியர் அலுவலக நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஆகியோர் அடங்கிய மாவட்ட அளவிலான தேர்வுக் குழு, மாவட்ட அளவிலான விருது பெறும் விவசாயிகளை ஆய்வு செய்து தேர்ந்தெடுக்கும்.

- மாவட்ட அளவிலான விருது வென்றவர்கள் மாவட்ட ஆட்சியரால் அறிவிக்கப்படுவார்கள். அரசு நிகழ்வு / விழாக்களின்போது சான்றிதழ்களுடன் வங்கி வரையோலையாக (DD) விருது வழங்கப்படும்.

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்.**

**/உண்மை நகல்/**

25.11.21
பிரிவு அலுவலர்

25.11.21